Judicial Form No. 53
(See Rule 42 of CRP)
DEPOSITION OF WITNESS.
(Chapter XXIII, Cr.P.C.)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II, SRIVILLIPUTTUR
CC NO.395/2019

**Depositions of PW- 1**

| | | | |
|---|---|---|---|
| Name | திரு.பொன் தினேஷ் | Occupation | ஹோட்டல் உரிமையாளர் |
| Father's name | சங்கரலிங்கம் | Calling | |
| Village | திருவில்லிபுத்தூர் | Religion | |
| Taluk | | Age. | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 03rd day of January 2026.

03.01.2026

எதிரி ஆஜர்.

**முதல் விசாரணை**

நான் தற்போது திருவில்லிபுத்தூரில் குடியிருந்து வருகிறேன். நான் ஹோட்டல் வைத்து தொழில் செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியாது. கடந்த 2017 ம் ஆண்டு ஒரு நாள் எனது இருசக்கர வாகனம் காணாமல் போய்விட்டது அது சம்மந்தமாக காவல்நிலையத்தில் புகார் கொடுத்திருந்தேன். அதன் பின்பு மறுநாள் என்னிடம் ஒரு தாளில் எழுதி கையெழுத்து மட்டும் பெற்றார்கள். ஒரு வாரம் கழித்து எனது இருசக்கர வாகனம் கிடைத்துவிட்டதாக காவல்நிலையத்திலிருந்து எனக்கு தகவல் தெரிவித்தார்கள். போலீசார் என்னை விசாரிக்கவில்லை. கையெழுத்து மட்டும் தான் பெற்றார்கள். என்னிடம் காட்டப்படும் புகார் மனுவிலுள்ள கையெழுத்து என்னுடையதுதான். **புகார் மனுவிலுள்ள கையெழுத்து மட்டும் அசாஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.

**சாட்சியை பகுதியாக பிறழ் சாட்சியாக பாவிக்கக்கோரி அரசு தரப்பில் அனுமதி கேட்டதன் பேரில் அனுமதிக்கப்பட்டு சாட்சி அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டார்.**

**<u>அரசுத்தரப்பில் குறுக்கு விசாரணை–</u>**

கடந்த 03.08.2017 அன்று தனது TN 67 AT 3678 என்ற பதிவெண் கொண்ட இருசக்கர வாகனம் காணாமல் போய்விட்டதாகவும் அது சம்மந்தமாக திருவில்லிபுத்தூர் நகர் காவல்நிலையத்தில் புகார் மனு கொடுத்ததாகவும் போலீசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது உண்மையை மறைத்து பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–</u>**

இல்லை.

சாட்சி சொல்ல சொல்ல என்னால் சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிகளிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

நீதித்துறை நடுவர் எண்.2,
திருவில்லிப்புத்தூர்.